# மெட்ரோ ரெயில் நிலையத்தில் மாணவர்களுக்கு தேர்வு



சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சத்ய சாய் சேவா அமைப்புடன் இணைந்து இன்று சென்ட்ரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் 9-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இலவச போட்டித் தேர்வு நடைபெற்றது. இதில் மாநில கல்வி வாரியம், மெட்ரிகுலேஷன் மற்றும் சி.பி.எஸ்.இ. பிரிவுகளில் பயிலும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள் பங்கேற்றனர்.